திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் பணியாளர்கள் வெளியே உண்ணுவிரதம் இருந்தபோது 'ப்ரஸ்டீஜ்' என்ற காரணத்தை வைத்து அவர்களுக்கு உடனடியாக அங்கிகாரம் கொடுக்காத காரணத்திஞல்தான் இந்தப் போராட்டம் நீடித்தது என்றும் உடனடியாக அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரித்திருந்தால் இது நீடித்திருக்காது என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பணியாளர்கள் சங்கம் உயர் நீதிமன்றத்தைப்பொறுத்தவரை தனியாக அங்கிகாரம் கேட்டார்கள். அதைப் பற்றி அவர்கள் பரிசிலிப்பதாக முடிவு இருந்தது. உடனடியாக வேண்டுமென்று கேட்டார்கள். முதலில் அதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று விரும்பியதாகத் தெரிகிறது. இருந்தாலும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் இதற்கு உடனடியாக அங்கிகாரம் கொடுத்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவைக் கண்டிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : உயர் நீதி மன்ற ஊழியர்கள் சங்கம் இப்போது அங்கிகரிக்கப்பட்டுள்ளதா? அதற்கு அந்தஸ்து ஏதேனும் தரப்பட்டிருக்கிறதா உயர் நீதிமன்றத்திலிருந்து ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் சொன்னேன்.

Building for District Court at Krishnagiri

* 356. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the construction of the building for the District Court at Krishnagiri has been started; and

(b) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கிருஷ்ணகிரியில் ரூ. 14.50 லட்சம் செலவில் அனைத்து நீதிமன்றங்களும் இணைந்துள்ள வகையில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு 1971, ஜூன் திங்களில்தான் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. சொ. காவேரிமணியம் : நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுகின்ற நேரத்தில் அதிலே பணிபுரிகின்ற வழக்கறிஞர்கள் தங்க தனி அறைகள் அமைத்து கட்சிக்காரர்களோடு கலந்து பேசவும், ஓய்வு பெறவும் வழி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதிமன்றக் கட்டடத்திற்குப் பக்கத்திலே வழக்கறிஞர்கள் ஓய்வு எடுப்பது வழக்கம் இல்லை என்று கருதுகிறேன். அவர்களுக்கு அங்கே நல்ல வேலை இருக்கும். இருந்தாலும் ஒரு இடத்தில் தங்க வேண்டுமென்பதற்காக ஒரு பெரிய ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கே வழக்கறிஞர் பயிற்சி எடுக்கிறார்களோ அங்கே அப்படிப்பட்ட ஒரு ஹால் அமைக்கப்பட்டிருக்கிறது.